# நமது தின கனி
மாலை நாளிதழ்
# NAMADHU DHINA KANI
Daily Morning

Vol: 01 | Issue: 273 | 4 Pages | 6.5.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 273 | 4 பக்கங்கள் | 6.5.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## நிலவில் இருந்து மாதிரிகளை சேகரிக்க செயற்கைக்கோள் அனுப்பிய சீனா



பீஜிங், மே.6

நிலவை ஆராய்ச்சி செய்வதில் உலக நாடுகள் பலவும் போட்டிப்போட்டு வருகின்றன. குறிப்பாக நிலவின் தென் துருவத்தில் முதன்முறையாக சந்திரயான்3 செயற்கைக்கோளின் லேண்டரை தரையிறக்கி இந்தியா சாதனை படைத்தது.

இந்தநிலையில் தற்போது சாங்கே6 என்ற செயற்கைக்கோளை சீனா அனுப்பி உள்ளது. இந்த செயற்கைக்கோள் நிலவில் 53 நாட்கள் தங்கி பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும். பின்னர் முதன்முறையாக நிலவில் இருந்து தூசி, பாறை உள்ளிட்ட மாதிரிகளை சேகரித்து பூமிக்கு கொண்டு வர உள்ளது.

இதற்காக சீனாவின் ஹைனான் மாகாணத்தில் உள்ள வென்சாங் விண்வெளி ஏவுதளத்தில் இருந்து லாங் மார்ச்5 ஒய்8 என்ற ராக்கெட் நேற்று விண்ணில் செலுத்தப்பட்டது. இதேபோல் வருகிற 2030ம் ஆண்டுக்குள் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தையும் சீனா அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

.................................

## காலிஸ்தான் அமைப்பு தலைவர் நிஜ்ஜார் கொலையில் 3 இந்தியர்கள் கைது



ஒட்டாவா, மே.6

காலிஸ்தான்பிரிவினைவாதஅமைப்புஒன்றின் தலைவரான ஹர்திப் சிங் நிஜ்ஜார் கடந்த ஆண்டு ஜூன் மாதம் கனடா நாட்டில் மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டினார். இதை இந்தியா திட்டவட்டமாக மறுத்தது.

இந்த விவகாரத்தால் இரு நாடுகள் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டு உள்ளது. இதற்கிடையே நிஜ்ஜார் கொலை தொடர்பாக சிறப்பு புலனாய்வு குழு விசாரித்து வருவதாக கனடா தெரிவித்தது. இந்த நிலையில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை வழக்கில் ஹிட் ஸ்குவாட் (தாக்குதல் குழு) உறுப்பினர்கள் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கனடா போலீசார் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் கரன் ப்ரார், கரன்ப்ரீத் சிங், கமல்ப்ரீத் சிங் ஆகிய இந்தியர்கள் என்றும், சில மாதங்களுக்கு முன்பு சந்தேக நபர்களை புலனாய்வு அதிகாரிகள்அடையாளம்கண்டதாகவும்,அவர்களைதீவிரகண்காணிப்பில் வைத்திருந்ததாகவும்தெரிவித்தனர். இதுகுறித்து போலீஸ்அதிகாரி டேவிட் டெபூல் கூறும்போது, நிஜ்ஜார் கொல்லப்பட்ட வழக்கில் 3 பேர் கைது செய்யப்பட்டு குற்றம்சாட்டப்பட்டு உள்ளனர். கொலை வழக்கைத் தவிர, இந்திய அரசாங்கத்துடன் தொடர்புகள் குறித்து தனி விசாரணைகள் நடந்து வருகிறது. கொலை வழக்கு மிகவும் தீவிர விசாரணையில் உள்ளது.

இந்த விவகாரத்தில் தனித்தனியான விசாரணைகள் நடந்து வருகின்றன. கைது செய்யப்பட்ட நபர்களின் ஈடுபாடு மட்டுமல்ல, இந்த முயற்சிகளில் இந்திய அரசாங்கத்துடனான தொடர்புகளை விசாரிப்பதும் அடங்கும் என்றார். கைது செய்யப்பட்டுள்ள 3 பேர் மீது தலா ஒரு முதல் நிலை கொலை மற்றும் நிஜ்ஜாரின் கொலைக்கு சதி செய்ததாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

.................................

## 75 ஆயிரம் ஆண்டு பழமையான மண்டை ஓடு மூலம் பெண்ணின் முகம் வடிவமைப்பு



ஈராக், மே.6

ஈராக்கின் குர்திஸ்தானில் உள்ள ஒரு குகையில் கடந்த 2018ம் ஆண்டு பழமையான உடைந்த மண்டை ஓட்டை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.

இந்த மண்டை ஓடு 75 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்றும், நியாண்டர்தால் இனத்தைச் சேர்ந்த பெண் என்றும் தெரிவித்தனர். அந்தப் பெண்ணுக்கு ஷானிதர் இசட் (மண்டை ஓடு கண்டெடுக்கப்பட்ட குகையின் பெயர்) என்று பெயரிடப்பட்டது.

இந்த நிலையில் நியாண்டர்தால் இனத்தைச் சேர்ந்த பெண் உயிருடன் இருந்தபோது எப்படி இருந்திருப்பார் என்பதை விஞ்ஞானிகள் உருவகப்படுத்தி உள்ளனர். மண்டை ஓட்டின் தட்டையான, உடைந்த எச்சங்களை அடிப்படையாக வைத்து அப்பெண்ணின் முகம் உருவாக்கப்பட்டுள்ளது. தொல்லியல் ஆய்வின்போது கிடைத்த அந்த மண்டை ஓட்டின் எலும்புகள் மிகவும் மென்மையாக இருந்தன.

அந்த எலும்புத் துண்டுகளை மீண்டும் ஒன்று சேர்த்து இணைப்பதற்கு முன்பு, முதலில் அவற்றை வலுப்படுத்தினர். பின்னர் வரலாற்றுக்கு முந்தைய வாழ்க்கையைச் சித்தரிக்கும் பேலியோஆர்ட் நிபுணர்கள்நியாண்டர்தால் பெண்ணின் 3டி மாதிரியை உருவாக்கினர்.

# மழை வேண்டி வன தேவதைகளுக்கு விழா எடுத்த மலைவாழ் மக்கள்



உடுமலை, மே.6

திருப்பூர் மாவட்டம் உடுமலையை அடுத்த ஆனைமலை புலிகள் காப்பக பகுதியில் உடுமலை மற்றும் அமராவதி வனச்சரகங்கள் உள்ளன. இங்குள்ள கோடந்தூர், பொருப்பாறு, ஆட்டுமலை, ஈசல் தட்டு, தளிஞ்சி, தளிஞ்சிவயல், கருமுட்டி, காட்டுப்பட்டி, குலிப்பட்டி, மாவடப்பு, குருமலை, மேல்குருமலை உள்ளிட்ட குடியிருப்புகளில் மலைவாழ் மக்கள் குடியிருந்து வருகிறார்கள்.

தற்போது நிலவும் கடும் வெப்பத்தின்காரணமாகவனப்பகுதிகாய்ந்துவிட்டது. அதைத்தொடர்ந்து வன தேவதைகளுக்கு விழா எடுத்து அதன் மூலமாக குளிர்வித்தால் மழைப்பொழிவு ஏற்படும் என்ற நம்பிக்கை. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் மலைவாழ் மக்கள் சாமிகளுக்கு விழா எடுத்து வருகின்றனர். அதன்படி கோடந்தூர் கட்டளை மாரியம்மன், சாப்பிஅம்மாள், தளிஞ்சி கொண்டம்மாள் உள்ளிட்ட வன தேவதைகளுக்கு விழா எடுப்பது என மலைவாழ் மக்கள் முடிவு செய்து நோன்பு சாட்டினார்கள்.

அதைத் தொடர்ந்து கம்பம் போடுதல் நிகழ்வு, மாவிளக்கு, பூவோடு எடுத்தல் நிகழ்ச்சியும் அம்மன் திருக்கல்யாணமும் நடைபெற்றது.

விழாவை பாரம்பரிய இசைக் கருவிகளுடன் மலைவாழ் மக்கள் ஆடல் பாடல் நடனத்துடன் உறவினர்களுடன் சேர்ந்து மகிழ்வுடன் கொண்டாடினார்கள். முடிவில் மஞ்சள் நீராட்டுடன் விழா நிறைவடைந்தது.

இதே போன்று மாவடப்பு மற்றும் சம்பக்காட்டு பகுதியிலும் மழைப்பொழிவு வேண்டி வன தேவதைகளுக்கு மலைவாழ் மக்கள் விழா எடுத்தனர். சமவெளி பகுதியில் கிராமங்கள் மற்றும் நகரப்புறத்தில் உள்ள கோவில்களில் மழைப்பொழிவு வேண்டி சிறப்பு யாகம் மற்றும் அபிஷேகங்கள் நடைபெற்று வருகிறது.

.................................

# பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வண்ணார்பேட்டை சாலை தெரு புகாரி ஹோட்டல் அருகே நீர் மோர் பந்தல் திறப்பு விழா

நெல்லை, மே.6

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் திராவிடப் பேரரசர் தளபதியார் ஆணைப்படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட் பட்ட வண்ணார்பேட்டை சாலைத் தெரு புகாரி ஹோட்டல் அருகே வாட்டி வதைக்கும் வெயிலின் தாக்கத்திலிருந்து பொதுமக்களை பாதுகாத்திட திருநெல் வேலி மத்திய மாவட்ட திமுக பொருளாளரும் 11 வது வட்ட கழக செயலாளர் வண்ணை இரா.சேகர் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தல் திரு நெல்வேலி மத்திய மாவட்ட திமுக முன்னாள் செயலாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ திறக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், மாவட்ட கழக துணைச் செயலாளர் தர்மன், நெல்லை மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜூ, தச்சநல்லூர் மண்டல தலைவர் ரேவதி பிரபு, மாநகர துணை செயலாளர் மூளிகுளம் பிரபு பாண்டியன், மேலப்பாளையம் பகுதி கழக செயலாளர் துபை சாகுல், மாமன்ற உறுப்பினர் கந்தன், திருமதி கீதா, வட்ட கழக செயலாளர் மேகை செல்வம், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங் கிணைப்பாளர் காசிமணி, ஒன்றிய கவுன்சிலர் முபீன் இஸ்மாயில், ஒன்றிய இளைஞர் அணி சாமு வேல், சுசிமணி, 11வது வட்ட கழக மூத்த முன்னோடிகள் ராமசாமி, சங்கர், தியாகராஜன், வட்ட பிரதிநிதிகள் பேராட்சி, லெட்சுமணன், ஆறுமுகம், வட்ட கழக துணை செயலாளர் சுப்பிரமணியன், செயற்குழு உறுப்பினர்கள் சுப்பிரமணியன், ஆறுமுகம், கழக நிர்வாகிகள் சங்கர், தங்கம், கார்த்தி, ஹரி, திரு.தங்க கணேஸ், கீர்த்தி, ஆனந்த், நித்திஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள்.

நீர் மோர் பந்தலில் குடிநீர், மோர், குளிர்பானங்கள், நுங்கு, வெள்ளரிக்காய், இளநீர், மாதுளம், பழம், தர்பூசணி கிர்ணி பழம் ஆகியவை பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் வாகன ஓட்டிகள் பொதுமக்கள் என்று வெயிலின் தாக்கத்தை குறைப்பதற்காக நீர்மோர் தொடர்ந்து நாள் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்களுக்கு நீர் மோர் பந்தல் அமைக்க உத்தரவிட்ட தமிழ்நாடு முதலமைச்சருக்கும் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் க்கும் பொதுமக்கள் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

.................................

# தருமபுரியில் வாகன சோதனையில் 11 கிலோ கஞ்சா கடத்திய ஒடிசாவைச் சேர்ந்த 2 வாலிபர்கள் கைது



தொப்பூர், மே.6

தருமபுரி மாவட்டத்தில் கள்ள சந்தையில் மது, தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள், கஞ்சா ஆகியவை சகஜமாக விற்பனை செய்யப்படுவதாக மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டீபன் ஜேசுபாதத்திற்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதைத்தொடர்ந்து மாவட்டம் முழுவதும் கஞ்சா, தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்வதையும், மேலும் மாவட்டம் வழியாக கஞ்சா கடத்தப்படுவதையும் தடுக்க வேண்டும் என்று மாவட்ட எஸ்.பி. உத்தரவிட்டார்.

அவரது உத்தரவின் பேரில் அவ்வப்போது போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டு கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களை கடத்தி வருபவர்களை கைது செய்தும் வருகின்றனர்.

இந்த நிலையில் தருமபுரி அருகே தொப்பூர் டோல்கேட் பகுதியில் நேற்று இரவு கஞ்சா தடுப்பு பிரிவு சப்இன்ஸ்பெக்டர் சுந்தரமூர்த்தி மற்றும் போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக ஒரு வாகனத்தை வழிமறித்து சோதனை செய்தனர்.

அதில் பயணம் செய்த 2 பேரின் பைகளை போலீசார் சோதனை செய்ததில் பொட்டலங்களாக கட்டி வைக்கப்பட்டிருந்தது. அதனை பிரிந்து பார்த்து அதில் சுமார் 11 கிலோ எடையுள்ள கஞ்சா மற்றும் விதைகளுடன் கஞ்சா செடிகள் இருந்தன.

அதனை ஒடிசா மாநிலம் கேந்திராபுரா அருகே உள்ள ராஜி நகரைச் சேர்ந்த பாய்லோசார் பெகரோ (வயது25), புத்தாதீப் ரோத் ஆகிய 2 பேரும் ஒடிசாவில் இருந்து தமிழ்நாட்டிற்கு கஞ்சாவை கடத்தி வந்தது தெரியவந்தது.

உடனே 2 பேரையும் போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 11 கிலோ எடையுள்ள கஞ்சாவையும் பறிமுதல் செய்தனர். இந்த சம்பவம் குறித்து தொப்பூர் போலீசார் வழக்கு பதிவு செய்து கைதான 2 பேரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

.................................

# காங்கிரஸ் மாவட்ட தலைவர் மரணம்: சி.பி.ஐ. விசாரணை தேவை பாஜக வற்புறுத்தல்

சென்னை, மே.6

தமிழக பா.ஜ.க. மாநில செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருநெல்வேலி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஜெயக்குமார் தனசிங், அவருக்கு சொந்தமான தோட்டத்திலேயே எரித்து படுகொலை செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. ஆளும் திமுக கூட்டணியில் உள்ள காங்கிரஸ் மாவட்டத் தலைவர் ஒருவர் கொடூரமாக கொல்லப்பட்டிருப்பதில் இருந்து தமிழகத்தில் சட்டம்ஒழுங்கு எந்த அளவுக்கு மோசமடைந்துள்ளது என்பதைக் காட்டுகிறது.

இந்த படுகொலையை சாதாரணமான கொலை சம்பவமாக எடுத்துக் கொள்ள முடியாது.

கொல்லப்பட்டவர் அப்பகுதியில் செல்வாக்கானவர். காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவர். நெல்லை மாவட்ட காவல் துறையினருக்கு நன்கு தெரிந்தவர். கடந்த ஏப்ரல் 19ந்தேதி நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் நெல்லை தொகுதியில் காங்கிரஸ் போட்டியிட்டது.

அத்தொகுதிக்கு காங்கிரஸ் கட்சிக்குள் பலத்த போட்டி இருந்தது. கடைசி நேரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ராபர்ட் புரூஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இதனால், கட்சிக்குள்ளேயே பல்வேறு பிரச்சனைகள் இருந்துள்ளன.

கொல்லப்பட்ட ஜெயக்குமார் மாவட்ட தலைவர் என்பதால் நெல்லை தொகுதி தேர்தல் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார்.

ராகுல்காந்தி கலந்து கொண்ட பொதுக்கூட்ட வரவுசெலவு கணக்குகள் மற்றும் தேர்தல் நிதி விவகாரங்களில் அவருக்கு முக்கிய தலைவர்களுடன் முன் விரோதம், கடும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

எந்த வழக்காக இருந்தாலும், குறிப்பாக அரசியல் தொடர்பான வழக்குகளாக இருந்தால் தி.மு.க.வினர் என்ன சொல்கிறார்களோ அதைத்தான் காவல்துறையினர் செயல்படுத்துவார்கள்.

எனவே, தி.மு.க. அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் காவல்துறை விசாரித்தால் நெல்லை மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஜெயக்குமார் கொலை வழக்கில் உண்மை வெளிவர வாய்ப்பே இல்லை.

எனவே, இந்த கொலை வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

# சென்னையில் இருந்து விமான சேவை அதிகரிப்பு




சென்னை, மே.6

கோடை விடுமுறையையொட்டி தமிழ்நாட்டில் பள்ளி, கல்லூரிகளுக்கு தேர்வுகளும் முடிந்து விடுமுறை விடப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஏராளமானோர் தங்களது சொந்த ஊர்களுக்கும், விடுமுறையை கழிக்க மலைப்பிரதேசங்களுக்கும் படையெடுத்து வருகின்றனர். வெயில் வாட்டி வதைப்பதால் ஏராளமானோர் விமான சேவையை பயன்படுத்த தொடங்கியுள்ளனர். குளிர்சாதன வசதியுடன், குறைந்த மணி நேரத்தில் இடத்தை சென்றடைய ஏதுவாக விமான பயணத்தை மக்கள் தேர்வு செய்கின்றனர்.

இதனால், சென்னை உள்நாட்டு விமான நிலையத்தில் பயணிகள் கூட்டம் வழக்கத்தைவிட அதிகமாக உள்ளது. சென்னை விமானநிலையத்தில் இருந்து தூத்துக்குடி, திருச்சி, மதுரை, கோவை, பெங்களூருவுக்கு கூடுதல் விமானங்கள் இயக்கப்படுகின்றன.

ஐதராபாத், டெல்லி, கொல்கத்தா உள்ளிட்ட நகரங்களுக்கும் விமான சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சுமார் 40க்கும் மேற்பட்ட விமானங்களின் சேவை அதிகரிப்பால் பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சென்னைதூத்துக்குடி இடையே தினசரி 6 விமானங்கள் இயக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது 8 விமானங்கள் இயக்கப்படுகின்றன. சென்னை கோவை இடையே தினமும் 12 விமானங்கள் இயக்கப்பட்ட நிலையில் தற்போது 16 விமான ங்களும், சென்னைமதுரை இடையே 10 விமான ங்களுக்கு பதில் 14 விமானங்கள் இயக்கப்படுகின்றன.

சென்னை பெங்களூரு இடையே 16 விமானங்களுக்கு பதில் 22 விமானங்கள் இயக்கப்படுகின்றன. சென்னைஐதராபாத் இடையே 20 விமானங்களுக்கு பதில் 28 விமானங்கள் இயக்கப்படுகின்றன.

# காதல் மனைவியை கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டு கணவனும் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் இராமநாதபுரத்தில் சோகம்



இராமநாதபுரம், மே.6

காதல் மனைவியை கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டு கணவனும் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் இராமநாதபுரத்தில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது

இராமநாதபுரம் தாயுமானசுவாமி கோவில் தெருவை சேர்ந்தவர் பன்னீர்செல்வம் சரண்யா தம்பதியினர் காதல் திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்தி வந்த நிலையில் இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் ஒரு ஆண் மற்றும் பெண் குழைந்தை கள் உள்ளனர் பன்னீர்செல்வம் கொத்தனார் வேலை செய்து வந்துள்ளார் சரண்யா தனியார் பல் மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறார் இந்த நிலையில் இவர்களுக்குள் அடிக்கடி குடும்ப பிரச்சினை ஏற்பட்டு வருவதாக தெரிகிறது நள்ளிரவு அதேபோல் பன்னீர்செல்வம் சரண்யா தம்பதியினிடைய தகராறு ஏற்பட்டதாகவும் ஒரு கட்டத்தில் தகராறு முற்றிப்போய் பன்னீர்செல்வம் தனது மனைவியை கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டு தானும் அதிகாலையில் தனக்குத்தானே கத்தியால் குத்திக்கொண்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்

இது குறித்து அந்தப் பகுதி பொதுமக்கள் அளித்த தகவலின் பேரில் அங்கு வந்த ஏ.எஸ்.பி சிவராமன் தலைமையிலான போலீசார் மோப்பநாய் உதவியுடன் அந்த பகுதிக்கு இருவரது உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர் இதில் பன்னீர்செல்வம் குடிபோதையில் இருந்ததாக கூறப்படுகிறதுபெற்ற இரண்டு குழந்தைகளை தவிக்க விட்டு விட்டு குடும்பப் பிரச்சினை காரணமாக காதல் திருமணம் செய்து கொண்ட மனைவியை கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டு கணவனும் கத்தியால் குத்திக்கொண்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

# காங்கிரஸ் மாவட்ட தலைவரின் புகாருக்கே திமுக ஆட்சியில் இதுதான் நிலைமை அண்ணாமலை



சென்னை, மே.6

நெல்லை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஜெயக்குமாரை கடந்த 2 நாட்களாக காணவில்லை என மகன் கருத்தையா ஜெப்ரின் புகார் அளித்திருந்த நிலையில் அவர் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

காணாமல் போனதாகத் தேடப்பட்டு வந்த காங்கிரஸ் கட்சியின், நெல்லை கிழக்கு மாவட்டத் தலைவர் ஜெயக்குமார் சடலமாக மீட்கப்பட்டுள்ளது மிகுந்த அதிர்ச்சியைத் தருகிறது. கடந்த ஏப்ரல் 30 ந்தேதியே மாவட்டக் காவல் கண்காணிப்பாளரிடம், தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக ஜெயக்குமார் புகார் அளித்திருப்பதாகத் தெரிகிறது. குறிப்பாக, நாங்குநேரி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ரூபி மனோகரன், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர் தங்கபாலு உள்ளிட்டவர்கள் பெயர்களை, அந்தப் புகார் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். ஆனாலும், காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவரின் புகாருக்கே, திமுக ஆட்சியில் இதுதான் நிலைமை என்றால், சாமானிய பொதுமக்கள் எதிர்கொள்ளும் சட்ட ஒழுங்கு பாதுகாப்பு குறித்த கேள்வி பலமாக எழுகிறது.

உடனடியாக, மறைந்த காங்கிரஸ் திருநெல்வேலி கிழக்கு மாவட்டத் தலைவர் ஜெயக்குமார் புகாரில் குறிப்பிட்டுள்ள அனைவரிடமும் விசாரணை நடத்தி, உண்மையை வெளிக்கொண்டு வர வேண்டுமென்று திமுக அரசை வலியுறுத்துகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# மதுரை மேற்கு ஒன்றிய அதிமுக சார்பில் சமயநல்லூர் ஊராட்சியில் நீர்மோர் வழங்கும் விழா: எதிர்க்கட்சி துணை தலைவர் ஆர்.பி.உதயகுமார் தொடங்கி வைத்தார்



அலங்காநல்லூர், மே.06

மதுரை மாவட்டம் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி சமயநல்லூர் ஊராட்சியில் மதுரை மேற்கு தெற்கு ஒன்றிய அதிமுக சார்பில் ஒன்றிய கழகச் செயலாளர் அரியூர் ராதாகிருஷ்ணன் ஏற்பட்டில் நடைபெற்ற கோடைகால நீர்மோர் பந்தல் வழங்கும் விழாவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர், முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கலந்து கொண்டு தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு வழங்கினார்.

பின்னர் செய்தியாளரிடம் தெரிவித்தது திருநெல்வேலி காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் எரித்து கொலை செய்யப்பட்டுள்ளார் அவர் கடந்த வாரம் காவல்துறை அதிகாரிகளிடம் நேரில் சென்று தனக்கு கொலை மிரட்டல் விடுத்து உள்ளதாக தெரிவித்துள்ளார் ஆனால் காவல்துறை மெத்தன போக்கால் ஒரு உயிர்போய் உள்ளது காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவருக்கே இந்த நிலைமை என்றால் அப்பாவி மக்களின் நிலைமை என்ன திமுக ஆட்சி கும்பகர்ணனாக தூங்கிக் கொண்டு உள்ளதாகவும் அதிமுக ஆட்சியில் ராணுவ கட்டுப்பாடு போல் இருந்த காவல்துறை திராவிட மாடல் ஆட்சியில் ஏவல் துறையாக உள்ளது எங்கு பார்த்தாலும் கஞ்சா மயமாக தலைவிரித்து ஆடுகிறது கஞ்சா போதையில் இளைஞர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் ஜெயின் பறிப்பு கொலை கொள்ளை கற்பழிப்பு உள்ளிட்டவர்களால் தமிழகம் சுடுகாடாக மாறிவிட்டது கட்டுப்படுத்த வேண்டிய காவல்துறை வேடிக்கை பார்த்துக் கொண்டு உள்ளது விடியா திமுக அரசு என்று வீட்டுக்கு போகிறதோ அன்றுதான் கல்லூரி மாணவ, மாணவியரும், பொதுமக்களும் சுதந்திரத்துடன் செயல்பட முடியும் என்று தெரிவித்தார்,

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கருப்பையா, மாணிக்கம், அம்மா பேரவை மாநில நிர்வாகிகள் வெற்றிவேல், வக்கீல் திருப்பதி, வாடிப்பட்டி ராஜேஷ்கண்ணா, ஒன்றிய செயலாளர் கொரியர்கணேசன், சமயநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் மலையாளம், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் பஞ்சவர்ணம், இளை செயலாளர் சுவாமிநாதன், ஒன்றிய கவுன்சிலர் அம்முலோகேஸ்வரன், கூட்டுறவு வங்கி துணை தலைவர் ராகுல், நிர்வாகிகள் உலகநாதன், தங்கமுருகன், சரிதாபானு, எம்ஜிஆர் மன்ற செயலாளர் ஜெயச்சந்திரமணியன், விவசாய அணி ஆர்.பி.குமார், மற்றும் தொழிலதிபர் முத்துகிருஷ்ணன் கேட்டுகடை முரளி, உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# காவிரி டெல்டா பகுதியில் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் அன்புமணி கோரிக்கை

சென்னை., மே.6

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

காவிரி பாசன மாவட்டங்களின் எந்தப் பகுதியிலும் கடந்த இரு மாதங்களில் தொடர்ச்சியாக 3 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படவில்லை. கடுமையான வறட்சி காரணமாக காவிரி பாசன மாவட்டங்களில் நிலத்தடி நீர் மட்டம் பல நூறு அடி கீழே சென்றுவிட்டது. அதனால், உழவர்கள் அதிக குதிரைத்திறன் சக்தி கொண்ட நீர் இறைப்பான்களை பயன்படுத்தி வருகின்றனர். ஆனாலும், கூட அவற்றின் மூலம் குறைந்த அளவிலேயே தண்ணீர் எடுக்க முடிகிறது.

பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்ச வேண்டும் என்றால் மும்முனை மின்சாரம் கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும்; உழவர்களை பாதுகாக்கும் வகையில், காவிரி பாசன மாவட்டங்களில் தினமும் 12 மணி நேரத்திற்காவது மும்முனை மின்சாரம் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# வணிகர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் ராமதாஸ் அறிக்கை



சென்னை, மே.6

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திரைகடலோடியவர்கள் வணிகர்கள் தான். வணிகர்கள் வருவாய் ஈட்டுவதைக் கடந்து சமூகத்திற்கு ஆற்றிய தொண்டுகள் அதிகம். உலகப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழ்பவர்களும் அவர்கள் தான். நாட்டின் வளர்ச்சிக்கு துணையாக இருக்கும் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் அவர்களையும் வளர்த்து, நாட்டின் பொருளாதாரத்தையும் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வணிகர்கள் இன்றைய சூழலில் வணிகம் சார்ந்து பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். வணிகர்கள் அனைவரும் ஒன்றுபட்டு குரல் கொடுப்பதன் மூலம் அனைத்து சிக்கல்களையும் களைந்து வணிகத்தில் வளர்ச்சியடைய இந்த நாளில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சதுரகிரிக்கு செல்ல பக்தர்களுக்கு 4 நாட்கள் அனுமதி




வத்திராயிருப்பு, மே.6

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே மேற்கு தொடர்ச்சி மலையில் சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோவில் உள்ளது. அமாவாசை, பவுர்ணமிக்கு தலா 3 நாட்கள், பிரதோஷத்திற்கு 2 நாட்கள் என மாதத்திற்கு 8 நாட்கள் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகிறது.

சித்திரை மாத அமாவாசை, பிரதோஷத்தை முன்னிட்டு சதுரகிரிக்கு நாளை (5ந்தேதி) முதல் 8ந்தேதி வரை பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

நாளை சித்திரை மாத பிரதோஷம் என்பதால் மாலை 4.30 மணிக்கு மேல் 6 மணிக்குள் பிரதோஷத்தை ஒட்டி சுந்தர மகாலிங்கம் சுவாமிக்கு பால், பன்னீர், இளநீர், பழம் உள்ளிட்ட 18 வகையான அபிஷேகங்கள் நடைபெறுகிறது.

அபிஷேகம் முடிந்ததும் சாமி அலங்கரிக்கப்பட்டு சிறப்பு பூஜை நடைபெறுகிறது. வருகிற 7ந்தேதி சித்திரை மாத அமாவாசை அன்று சுந்தர மகாலிங்கம் சுவாமிக்கு அபிஷேகம் மற்றும் சிறப்பு பூஜையில் நடைபெற உள்ளது.

பிரதோஷம் மற்றும் அமாவாசை உள்ளிட்ட நாட்களுக்கு பக்தர்கள் கூட்டம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 10 வயதிற்குட்பட்ட குழந்தைகள் 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் சளி, இருமல், காய்ச்சல் உள்ளவர்கள் கோவிலுக்கு வருவதை தவிர்க்க வேண்டும். இரவில் பக்தர்கள் தங்குவதற்கு அனுமதி கிடையாது. பாலித்தீன் பை, பீடி சிகரெட், மது மற்றும் போதைப்பொருட்கள், எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் கொண்டு செல்ல அனுமதி இல்லை.

சுந்தர மகாலிங்கம் சாமி பரம்பரை அறங்காவலர் ராஜா என்ற பெரியசாமி, செயல் அலுவலர் ராமகிருஷ்ணன் ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் மருத்துவக் குழுவினர் இந்த 4 நாட்களும் தாணிப்பாறை வனத்துறை கேட்பகுதியில் இருப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

# அரசின் பொங்கல் சிறப்பு தொகுப்பில் தொழில் அதிபரிடம் ரூ.1.25 கோடி மோசடி



புதுக்கோட்டை, மே.6

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி கோட்டைப்பட்டினத்தை சேர்ந்தவர் முகமது பயாஸ் (வயது40). வெளிநாடுகளுக்கு ஆட்கள் அனுப்பும் நிறுவனம் நடத்தி வருகிறார்.

இவரை கும்பகோணம் சோழபுரத்தை சேர்ந்த முகமது சுகைல் (32) என்பவர், தான் தமிழ்நாடு அரசின் பொங்கல் பரிசு தொகுப்பை தயாரித்து வழங்கும் ஒப்பந்தம் எடுத்துள்ளதாக கூறி அறிமுகம் செய்து கொண்டுள்ளார்.

இந்த தொழிலில் முதலீடு செய்தால் ஒரு லட்சம் பொங்கல் பரிசு தொகுப்பு பைகளுக்கு ரூ.22 லட்சம் லாபம் கிடைக்கும் என ஆசை வார்த்தை காட்டியுள்ளார்.

இதனை நம்பிய முகமது சுகைல் முதல் கட்டமாக ரூ.50 லட்சமும், அடுத்த கட்டமாக ரூ. 25 லட்சமும் கொடுத்துள்ளார். இதில் அவர் கொடுத்த தொகைக்கு வட்டியாக ரூ.19 லட்சத்தை முகமது சுகைல் வழங்கி உள்ளார்.

அதிக வட்டி தருவதாக கூறி அதில் இருந்தும் ரூ.10 லட்சத்தை கூடுதல் முதலீடாக பெற்றுக்கொண்டுள்ளார். நாளடைவில் முகமது சுகைல் வட்டியும் கொடுக்க வில்லை. பணமும் கொடுக்கவில்லை. இது தொடர்பாக ஊர் முக்கியஸ்தர்களை வைத்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அப்போது, ரூ.5 கோடிக்கு ஏலச்சீட்டு போட்டுள்ளதாகவும். அதற்கு தவணை தொகை செலுத்த ரூ.50 லட்சம் கிடைத்தால் அந்த சீட்டை எடுத்து, கடன்களை அடைத்துவிடுவதாக முகமது சுகைல் கூறியுள்ளார்.

இதையும் நம்பி ரூ.50 லட்சத்தை முகமது பயாஸ் கொடுத்துள்ளார்.

அதன் பிறகு கொடுத்த பணம் ரூ.1.35 கோடியை திரும்பிக்கேட்ட முகமது பயாஸுக்கு, முகமது சுகைல் மிரட்டல் விடுத்துள்ளார்.

இந்நிலையில் எஸ்பி அலுவல கத்தில் முகமது பயாஸ் புகார் அளித்தார் அந்த புகாரின் பேரில் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் விசாரித்த போது, தற்காலிகமாக ரூ.10லட்சத்தைகொடுத்து விட்டு மீதி பணத்தை கொடுக்காமல் ஏமாற்றி வந்துள்ளார். இதன் தொடர்ச்சியாக எஸ்பி அலுவலகத்தில் முகமது பயாஸ் மீண்டும் ஒரு புகார் அளித்தார்.

இந்த புகாரின் பேரில் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார், முகமது சுகைலையை நேரில் அழைத்து விசாரணை நடத்தினர். விசாரணையில், அவர் வாங்கிய தொகைகளை ஒப்புக்கொண்டுள்ளார். இதுகுறித்து போலீசார் வழக்கு பதிந்து முகமதுசுகைலை கைது செய்தனர்.

இது தொடர்பாக அவரிடம் தொடர் விசாரணைக்கு பின்னர் குற்றவியல் நடுவர் நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு புதுக்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டார்.

# 8 அரசு மருத்துவமனைகளில் உடல் வெப்ப பாதிப்பு நோய்களுக்கு தனி வார்டு

ஈரோடு: மே. 6

ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக கோடை வெப்பம் வாட்டி வருகிறது. கடந்த ஏப்ரல் மாதத்தில் 27 நாட்கள் ஈரோட்டில் 104 டிகிரி வெப்பம் பதிவாகி புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

இந்நிலையில் வெப்ப பாதிப்பு நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை உட்பட 8 மருத்துவமனைகளில் சிறப்பு வார்டு தொடங்கப்பட்டுள்ளது. குளிர்சாதன வசதி கொண்ட இந்த வார்டில் வெப்ப அலர்ஜியால் பாதிக்கப்பட்டு இங்கு சிகிச்சைக்கு வருபவர்களுக்கு முதலுதவி அளிக்க செவிலியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து ஈரோடு அரசு மருத்துவமனை உறை விட மருத்துவ அதிகாரி கூறியதாவது:

அதிக வெப்ப தாக்குதலால் 4 வகையான பாதிப்புகள் ஏற்படும். வெப்ப எரிச்சலால் புண் ஏற்படும், தோல் சிவப்பாக மாறும், கால்களில் நரம்பு இழுத்துக் கொள்ளும், நீர்ச்சத்து குறைவால் வயிற்று வலி ஏற்படும், கோடை காலத்தில் உடலில் நீர் சத்து குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்காக அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் உப்பு சர்க்கரை கரைசல் வழங்கப்படுகின்றனர். வெப்ப அலற்ஜி அல்லது வெப்ப பக்கவாத நோய் பாதிப்பு ஏற்படும் போது உடனடியாக உடல் வெப்பத்தை குறைக்கும் முதலுதவி சிகிச்சை அளிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களின் கழுத்து பகுதி, முழங்கால் மடிப்பு உள்ளிட்ட பகுதிகளில் ஐஸ்கட்டிகளை கொண்டு ஒத்தடம் கொடுக்க வேண்டும், உடலுக்கு நீர்ச்சத்து கிடைக்க குளுக்கோஸ், உப்பு கரைசல் நீரை வழங்க வேண்டும் என்று கூறினார்.

# திண்டுக்கல்லில் மழை வேண்டி ஊரணியில் பொது தொழுகை செய்த இஸ்லாமியர்கள்



திண்டுக்கல், மே.6

திண்டுக்கல் அருகே உள்ள வேல்வார் கோட்டை கிராமத்தில் உள்ள ஊரணியில் இஸ்லாம் ஜமாத் சார்பில் மழை வேண்டி சிறப்பு தொழுகை நடைபெற்றது, தமிழகத்தில் தற்சமயம் வெயிலின் தாக்கம் 110 டிகிரிக்கு மேல் அதிகரித்த வண்ணம் உள்ளது. இதனால் முதியவர்கள் குழந்தைகள் விலங்கினங்கள் பெரிதும் அவதிக்குள்ளாகின்றனர். இயற்கை வளங்கள் குளம் ஆறு ஆகியவை வற்றி நீர் ஆதாரம் குறைந்து வருகிறது . இந்நிலையில் ஆங்காங்கே மழை வேண்டி வழிபாடுகள் பிரார்த்தனைகள் தொழுகைகள் நடைபெற்று வருகின்றன, திண்டுக்கல் . வேல்வார் கோட்டையில் இஸ்லாம் ஜமாத் சார்பில் ஊரணியில் மழை வேண்டி நடைபெற்ற சிறப்பு தொழுகையில் தாமரைப்பாடி வேல்வார்க்கோட்டை வடமதுரை ஆகிய பகுதிகளில் இருந்து இஸ்லாமியர்கள் கலந்து கொண்டனர்,

# ஆதிபராசக்தி மன்றம் சார்பில் நீர் மோர் தண்ணீர் பந்தல் திறப்பு



நாமக்கல் மே .6

நாமக்கல் ஆதிபராசக்தி மன்றத்தின் சார்பில் நாமக்கல் நகரில் நீர்மோர் தண்ணீர்ப்பந்தல் திறக்கப்பட்து. மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மீக குரு அம்மாவின் ஆணைக்கு இணங்க நாமக்கல் ஆர்.பி.புதூர் குட்டை மேலத்தெரு பொன். கைலாஷ் கார்டனில் அமைந்துள்ள மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம் என்.கே.2.சார்பில் நாமக்கல் பலப்பட்டரை மாரியம்மன் கோயில் பின்புறம் மெயின்ரோடு அருகே நீர் மோர் பந் தல் அமைக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சியின் துவக்க விழாவிற்கு மன்ற செயலாளர் ஆர்.தியாகராஜன் வரவேற்றார். முன்னாள் தலைவர் ஆசிரியர் பொன்னுசாமி மன்ற செயலாளர் மதன்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மன்றத்தின் தலைவர் . ஏ . சேகர் தலைமை வகித்தார். நகர் மன்ற உறுப்பினர் டி.டி.சரவணன். பொதுமக்களுக்கு நீர்மோர் வழங்கி சமுதாய பணியினை துவக்கி வைத்தார்.

# ஆலங்குளத்தில் சண்டே கிரிக்கெட் கிளப் சார்பில் கிரிக்கெட் போட்டி: முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவ.பத்மநாபன் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்



தென்காசி, மே.6

ஆலங்குளத்தில் சண்டே கிரிக்கெட் கிளப் சார்பில் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது கடந்த நான்கு நாட்களாக நடைபெற்ற கிரிக்கெட் போட்டியின் இறுதிப்போட்டி இன்று நடைபெற்றுபரிசளிப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சிக்கு ஆலங்குளம் பேரூராட்சி மன்ற தலைவர் சுதா மோகன்லால் அவர்கள் தலைமை தாங்கினார் முன்னாள் பேரூராட்சி துணைத் தலைவர் தங்க செல்வம் மாவட்ட பிரதி அன்பழகன் சோனா மகேஷ் ஆகியோர்கள் ரமுன்னிலை வைத்தனர். சண்டே கிரிக்கெட் கிளப் நிர்வாகி பிரகாஷ் வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவ பத்மநாபன் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்கள் நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர் மேகநாதன் மாவட்ட தொண்டர் அணி தலைவர் வெங்கடேசன் மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் செல்வன் சின்னவர் உதய நீதிமன்ற தலைவர் அருணா பாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

போட்டியில் மணிமுத்தாறு போலீஸ் அணி முதல் பரிசை வென்றது அவர்களுக்கு ரூபாய் பத்தாயிரமும் கோப்பையும் வழங்கப்பட்டது தொடர்ந்து இரண்டாவது இடத்தை சண்டே கிரிக்கெட் கிளப் பணி பெற்றது அவர்களுக்கு கோப்பையும் ரூபாய் 8000 வழங்கப்பட்டது. மூன்றாவது இடத்தை ஆலங்குளம் ஏசிசி அணி வெற்றி பெற்றது அவர்களுக்கு ரூபாய் 5000 கோப்பையும் வழங்கப்பட்டது நான்காவது இடத்தை குருவங்கோட்டை சேர்ந்த மினி குருவை அணி பெற்றது அவர்களுக்கு ரூபாய் 3000 கோப்பையும் வழங்கப்பட்டது தொடர்ந்து ஐந்தாவது இடத்தை குத்த பஞ்சாப் என்சிசி அணி வெற்றி பெற்றது அவர்களுக்கு ரூபாய் 3000 கோப்பையும் வழங்கப்பட்டது

# கூடுதல் மகசூலுக்கு மண்பரிசோதனை செய்திட வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை



புதுக்கோட்டை, மே.6

புதுக்கோட்டை மாவட்டத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களில் நடைபெற்று வரும் மண் மாதிரிகள் சேகரிக்கும் முகாம்களில் கலந்து கொண்டு விவசாயிகள் பயன்பெறுமாறு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் திரு. மா. பெரியசாமி அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி. குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பு 2024 25 ஆண்டிற்கான தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் 98 பஞ்சாயத்துகளில் மண் மாதிரிகள் சேகரிக்கும் முகாம் நடைபெற்று வருகிறது. எனவே விவசாயிகள் இந்த மண் மாதிரி முகாம்களில் கலந்து கொண்டு தங்களின் சாகுபடி நிலத்தில் மண் மாதிரிகளை சேகரம் செய்து, மண்பரிசோதனை செய்திட தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மண் மாதிரிகளை சேகரித்து குடுமியான்மலை மண் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பிட வேண்டும். மேலும், மண் பரிசோதனை ஆய்வு முடிவுகளை பெற்று அதனடிப்படையில் சாகுபடிக்கு தேவையான உரங்களை தேவையான அளவு இடுவதன் மூலம் உர செலவு குறைகிறது மகசூலும் அதிகரிக்கிறது.

பேரூட்ட சத்துக்கள் மட்டுமில்லாமல் மண்ணில் உள்ள நுண்ணூட்ட சத்துக்களின் அளவையும் தெரிந்து கொண்டு உரம் இடுவதனால் பயிரின் வளர்ச்சி சீராகவும் மகசூல் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளதால் விவசாயிகள் மண் பரிசோதனை அடிப்படையில் உரமிட்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது..

மாவட்டம் முழுவதும் நடைபெற்று வரும் மண் சேகரிப்பு முகாமில் ஒரு பகுதியாக அன்னவாசல் வட்டாரம், பனம்பட்டி கிராமத்தில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டது. அது குறித்து செயல் விளக்கம் விவசாயிகளுக்கு செய்து காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் தரக்கட்டுப்பாடு வேளாண்மை உதவி இயக்குநர்(பொ) திரு. ச. கிருஷ்ணமூர்த்தி, அன்னவாசல் வேளாண்மை உதவி இயக்குனர் எஸ். ராஜசேகரன், தரக் கட்டுப்பாடு வேளாண்மை அலுவலர் எஸ். முகமது ரபி, அன்னவாசல் வட்டார வேளாண்மை அலுவலர் கௌசல்யா உதவி வேளாண்மை அலுவலர் செல்வி. மகாலெட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பாண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களில் நடைபெற்று வரும் மண் மாதிரிகள் சேகரிக்கும் முகாம்களில் கலந்து கொண்டு விவசாயிகள் பயன்பெறுமாறும்,

கூடுதல் விபரங்களுக்கு தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறும், புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் மா. பெரியசாமி தெரிவித்துள்ளார்

# மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மூலம் அமைக்கப்பட்ட நீர்மோர் பழம் மற்றும் பழச்சாறு பந்தல்: அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் திறந்து வைத்தார்



காரைக்குடி, மே.6

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மூலம் அமைக்கப்பட்ட நீர்மோர் பழம் மற்றும் பழச்சாறு பந்தலை மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன், திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்கு முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமையிலும் மேயர் சே. முத்துத்துரை முன்னிலையிலும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் நா. குணசேகரன், கழக நிர்வாகிகளும் மாமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியை மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் துணை அமைப்பாளர் காரை சுரேஷ் ஏற்பாடு செய்திருந்தார்கள். மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் குமரேசன் மற்றும் பேரவை நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# உடல் உறுப்புகள் தானம் பெறப்பட்ட நபரின் உடலுக்கு மாவட்ட கலெக்டர் நேரில் அரசு மரியாதை



திருவண்ணாமலை, மே.6

செங்கம் வட்டம்,புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் அல்லியந்தல் ஊராட்சியை சார்ந்த உடல் உறுப்புகள் தானம் பெறப்பட்ட நபரின் உடலுக்கு மாவட்ட கலெக்டர் தெ.பாஸ்கர பாண்டியன், நேரில் அரசு மரியாதையுடன் அஞ்சலி செலுத்தினர்.

உடல் உறுப்புகள் தானத்தின் மூலம் நூற்றுக்கணக்கானோருக்கு வாழ்வளிக்கும் அரும்பணியில் நாட்டின் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து விளங்கி வருகிறது. மூளைச்சாவு நிலையை அடைந்த துயர சூழ்நிலையிலும், உடல் உறுப்புகளை தானமாக அளிக்க முன்வரும் குடும்பங்களின் தன்னலமற்ற தியாகங்களால் தான் இந்த சாதனை சாத்தியமாகி உள்ளது.

உடல் உறுப்புகளை தானமாக வழங்கி பல உயிர்களை காப்போரின் தியாகத்தினை போற்றிடும் வகையில் அவர்களது உடலுக்கு இறுதி சடங்குகள் அரசு மரியாதைகளுடன் மேற்கொள்ளப்படும் என கடந்த ஆண்டு செப்டம்பர் 23 தேதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் செங்கம் வட்டம்,புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் அல்லியந்தல் ஊராட்சியை சேர்ந்த கே.பாலமுருகன் என்பவர் செங்கம் சாலைஇ பாச்சல் ஊராட்சி அருகே அடையாளம் தெரியாத வாகனம் மோதி நடந்த சாலை விபத்தில் படுகாயம் அடைந்து திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 03.05.2024 உயிரிழந்தார். அதனை தொடர்ந்து அவரது குடும்பத்தினர் உடல் உறுப்பு தானம் செய்ய சம்மதித்து அண்ணாரது உடல் உறுப்பு தானமாக பெறப்பட்டது. உடல் உறுப்பு தானம் செய்யப்பட்டதை தொடர்ந்து அரசின் சார்பில் மாவட்ட கலெக்டர் தெ.பாஸ்கர பாண்டியன் அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

# திமுக இளைஞர் அணி சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா



கிருஷ்ணகிரி மே,5,

கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க அதிகரித்து வரும் கடும் கோடை வெயில் கருத்தில் கொண்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் , கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, கிருஷ்ணகிரி நகரத்க்குட்பட்ட திருவண்ணாமலை பைபாஸ் அருகில் திமுக இளைஞர் அணி சார்பில் பொதுமக்களின் தாகம் தீர்த்திட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கொண்ட *தண்ணீர் பந்தல்* திறப்புவிழாவினை *கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான தே. மதியழகன் கலந்துக்கொண்டு துவக்கி வைத்து, தர்பூசணி, இளநீர், மோர் ,குளிர்பானங்களை பொதுமக்களுக்கு வழங்கி சிறப்பித்தார். உடன் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள்,துணை தலைவர்கள் , அனைத்து அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள் , அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், என அனைவரும் தண்ணீர் பந்தல் திறப்புவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# காரைக்குடி குளோபல் மிஷின் ஹாஸ்பிடல் மற்றும் காரைக்குடி ஊற்றுக்கள் அமைப்பும் இணைந்து சமூக ஆர்வலர் ஜான் பாலின் 2ம் ஆண்டு நினைவு மாபெரும் கண் சிகிச்சை முகாம்



காரைக்குடி, மே.6

காரைக்குடி குளோபல் மிஷின் ஹாஸ்பிடல் மற்றும் காரைக்குடி ஊற்றுக்கள் அமைப்பும் இணைந்து சமூக ஆர்வலர் ஜான் பாலின் இரண்டாம் ஆண்டு நினைவு மாபெரும் கண் சிகிச்சை முகாம் மற்றும் இலவச அறுவை சிகிச்சை முகாம் நடைபெற்றது. முகாமை கோவிலூர் கானல் கண் மருத்துவமனை உதவியோடு மிகச் சிறப்பாக நடத்தினர் . நூற்றுக்கணக்கான மக்கள் பயன்பட்டனர். இந்நிகழ்ச்சியின் முக்கிய நிகழ்வாக இதுவரை தமிழகத்தில் இல்லாத அளவில் கண் மற்றும் உடல் உறுப்பு தானத்தை 70 க்கும் மேற்பட்டோர் செய்தனர். உடல் உறுப்பு மற்றும் கண் தானம் செய்தவர்களுக்கு ராமநாபுரம் சரக டிஐஜி துரை அவர்கள் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார். சமூக ஆர்வாலர் டாக்டர் பிரபு சிறபபுரையாற்றினார் நிகழ்ச்சி ஒருங்கினைப்பாளரும், குளோபல் மிசின் மருத்துவமனையின் தலைமை மருததுவர் டாக்டர் குமரேசன் கூறும்போது எங்களுடைய டைம் ஹல்த்கேர் பவுண்டேஷன் மற்றும் சாரிட்டபிள் டிரஸ்ட் மூலம் கண் மற்றும் உடல் உறுப்பு தானத்தை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ,முதலில் மருத்துவராகிய நாங்களும், எங்கள் மருத்துவமனை செவிலியர்கள் மற்றும் விருப்பம் உள்ள ஊழியர்களிடம் பெற்று மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று இருக்கும் போது சமூக ஆர்வலர் ஜான் பாலின் இரண்டாம் ஆண்டு நினைவு அனுசரிக்கும் வகையில் இன்றே இலவச கண் சிகிச்சை முகாம் மற்றும் உடல் உறுப்பு தானத்தை ஏற்பாடு செய்தோம். நாங்கள் எதிர்பாக்காத அளவில் 70 க்கும் மேற்பட்டோர் தானம் செய்தனர். எங்களுடன் உறுதுணையாக இணைந்து செய்ல்பட்ட காரைக்குடி ஊற்றுக்கள் மற்றும் சமுக ஆர்வாலர்களுக்கும் கண் சிகிச்சை முகாமை நடத்திய கோவிலூர் காணல் கண் மருத்துவமனைக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கண் மற்றும் உடல் உறுப்பு தானம் என்பது இன்றைய காலகட்டத்தில் மிகவும் முக்கியமானது. தமிழக அரசு அதற்கான வெப் சைட் உறுவாக்கியுள்ளது. அதில் நாம் உறுப்புகளை தானம் செய்ய போவதை பதிவு செய்து கொள்ளலாம். நாம் இறந்த பிறகு உடல் உறுப்பு தானத்திற்கான பிரத்யோக அலைபேசி எண்ணிற்கு உறவினர்கள் தொடர்பு கொண்டால் அவர்களே உங்கள் இருப்பிடத்திற்கே வந்து பெற்றுக் கொள்வார்கள். முதலில் மருத்துவர்களாகிய நாங்கள் உடல் உறுப்பு தானம் செய்தால் தான் பொதுமக்களும் ஆர்வமாக கலந்து கொள்வார்கள் என நினைத்து இந்த விழிப்புணர்வு முகாமை நடத்தினோம் நாங்கள் எதிர்பாரத வகையில் மருத்துவமனை ஊழியர்கள் தவிர பொதுமக்களும் அதிக அளவில் உடல் உறுப்பு தானம் செய்தது எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. எங்கள் அழைப்பை ஏற்று இராமநாதபுரம் சரக டிஐஜி துறை அவர்கள், காரைக்குடி டிஎஸ்பி பிரக்காஷ் அவர்கள் கலந்து கொண்டதற்கு நன்றி என தெர்வித்தார்.

# தஞ்சையில் இலவச கண் சிகிச்சை முகாம்



தஞ்சாவூர், மே. 6

தஞ்சை பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள மாநகராட்சி அறிஞர் அண்ணா நூற்றாண்டு அரங்கில் தஞ்சாவூர் வசந்தம் லயன்ஸ் சங்கம் மற்றும் தஞ்சை மாவட்ட வணிகர் சங்கப் பேரவை, தஞ்சாவூர் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் இணைந்து இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தியது.

முகாமிற்கு வசந்தம் லயன்ஸ் சங்கத் தலைவர் கருணாகரன் தலைமை தாங்கினார். சங்க செயலாளர் சீனிவாசன் வரவேற்றார்.

முகாமை தஞ்சை மாவட்ட வணிகர் சங்கப் பேரவை நிறுவனத் தலைவர் பி.சீனிவாசன் தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் தஞ்சை மாவட்ட வணிகர் சங்கப் பேரவை தலைவர் கணேசன் செயலாளர் ரவி தஞ்சை மாநகர தலைவர் நசீர் வசந்தம் லயன்ஸ் சங்கத் துணைத் தலைவர்கள் சம்பத், வடிவேலன் பொருளாளர் என்.ஆர்.சரவணன் முன்னாள் தலைவர் பால்ராஜ் ராயல் மித்ரா ஆப்டிக்கல்ஸ் ரெங்கராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு தஞ்சை மேக்ஸ் கண் மருத்துவமனை டாக்டர்கள் கண் பரிசோதனை செய்து ஆலோசனைகள் வழங்கினர்.

## ஆவேஷம் படத்தின் ஓடிடி வெளியீடு எப்போது?




ரோமஞ்சம் படத்தை இயக்கிய ஜித்து மாதவன் இயக்கத்தில் பகத் பாசில் நடித்த படம் ஆவேஷம் கடந்த மாதம் 11 ஆம் தேதி வெளியாகியது . படம் மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. உலகளவில் இதுவரை ஆவேஷம் திரைப்படம் 130 கோடி ரூபாய் வசூலித்துள்ளது. இதில் ஃபஹத் ஃபாசிலுடன் சஜின் கோபு, சிஜு சன்னி, ஆஷிஷ் வித்யார்த்தி, மன்சூர் அலிக்கான் போன்ற முன்னணி நடிகர்கள் நடித்துள்ளனர். மஞ்சும்மல் பாய்ஸ் படத்திற்கு இசையமைத்த சுஷின் ஷ்யாம் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

படத்தின் பாடல்கள் அனைத்தும் மிக ஹிட்டாகியது குறிப்பாக டேப்சி குரலில் இலுமினாட்டி என்ற பாடல் இன்ஸ்டாகிராமில் வைரலாகி வருகிறது. படத்தில் பகத் பாசில் ரீல் செய்யும் காட்சிகளை மக்கள் இன்ஸ்டாகிராமில் ரீ கிரியேட் செய்து வருகின்றனர். படத்தில் பகத் பாசில் முற்றிலும் மாறுபட்ட கேங்க்ஸ்டர் கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார்.

பெங்களூருவைச் சேர்ந்த கேங்க்ஸ்டரான ரங்கனைச் (பகத்) சந்திக்கும் மூன்று கல்லூரி மாணவர்கள், அவரால் என்னென்ன பிரச்னைகளைச் சந்திக்கிறார்கள் என்பதே படத்தின் கதை. இந்நிலையில் படம் அமேசான் பிரைம் ஓ.டி.டி.யில் மே 9ம் தேதி வெளியாகுமென தகவல்கள் வெளியாகியுள்ளன. இது குறித்து தயாரிப்பு நிறுவனம் விரைவில் அதிகாரபூர்வமாக தெரிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## டி.ஜே ஞானவேலின் அடுத்த படத்தின் கதாநாயகன் யார்?



நடிகர் ரஜினிகாந்த், அமிதாப் பச்சன், மஞ்சுவாரியர், ராணா டகுபதி, ரித்திகா சிங், பகத் ஃபாசில் உள்ளிட்டவர்கள் லீட் கேரக்டர்களில் நடித்து வரும் வேட்டையன் படத்தின் சூட்டிங் விரைவில் நிறைவடையவுள்ளதாக கூறப்பட்டுள்ளது. இப்படத்தை டிஜே ஞானவேல் இயக்கியுள்ளார். தற்போது படத்தின் சூட்டிங் மும்பையில் நடைப்பெற்று வருகிறது. நேற்று அமிதாப் பச்சனுடன் ரஜினிகாந்த் இணைந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் வைரலாகியது.

33 வருடங்களுக்கு பிறகு அமிதாப் பச்சன் ரஜினிகாந்துடன் இணைந்து படத்தில் நடிகவுள்ளார். அமிதாப் பச்சன் நடிக்கும் முதல் தமிழ் திரைப்படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படத்தைதொடர்ந்துடிஜே ஞானவேல்அடுத்ததாகதெலுங்குசினிமாவின் முன்னணி நடிகரான நானி நடிப்பில் படம் இயக்கவுள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக வேட்டையன் படத்தில் வரும் ராணா கதாப்பாத்திரத்திற்கு நானியை அணுகியுள்ளார் கால்ஷீட் பிரச்சனைகளால் அவரால் வேட்டையன் படத்தில் நடிக்க முடியவில்லை. அப்போது அவர் நானிக்கு ஒரு கதையை கூறியதாகவும் அது அவரை மிகப் பெரிய அளவில் கவர்ந்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து அதிகாரப்பூர்வ தகவல் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தர்ஷனுடன் இணையும் மலையாள நடிகை புதுப்பட அப்டேட்



2018 ஆம் ஆண்டு சிவகார்த்திகேயன் மற்றும் ஐஷ்வர்யா நடிப்பில் வெளியான கனா படத்தில் தர்ஷன் நடித்து பிரபலாமானார். ஒத்தயடி பாதியில் பாட்டின் மூலம் மக்களுக்கு பரிட்சையமாகினார். அதைத் தொடர்ந்து 2019 ஆண்டு வெலிவந்த தும்பா படத்தில் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடித்தார்.

குக் வித் கோமாளி சீசன் 3 நிகழ்ச்சியில் பங்கேற்று இரண்டாம் பரிசை வென்றார். அஜித் நடித்த துணிவு படத்தில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்தார். தர்ஷனுடன் ஆர்ஷா சந்தினி பைஜு இணைந்து நடிக்கவுள்ளார். இதற்கு முன் மலையாள திரைப்படமானமுகுந்தஉன்னிஅசோசியேட்ஸ்திரைப்படத்தில் நடித்தது குறிப்பிடத்தக்கது.

இவர்களுடன் காளி வெங்கட், வினோதினி வைத்தியனாதன் மற்றும் KPY 2 தீனா முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கவுள்ளனர்.

தற்பொழுது தர்ஷனின் அடுத்த படத்திற்கான பூஜை விழா நேற்று சிறப்பாக நடந்து முடிந்தது. இதை அறிமுக இயக்குனரான ராஜ்வேல் இயக்கவுள்ளார். பிரேமம் திரைப்படத்திற்கு இசையமைத்த ராஜேஷ் முருகேசன் இப்படத்திற்கு இசையமைக்கவுள்ளார். பிலே ஸ்மித் ஸ்டூடியோஸ், விவா எண்டர்டெயின்மண்ட் மற்றும் சவுத் ஸ்டூடியோஸ் இப்படத்தை தயாரிக்கவுள்ளனர்.

## ஷங்கர் குடும்பத்துடன் அசத்தலாக போஸ் கொடுக்கும் ஜேசன் சஞ்சய்




பிரபல இயக்குனர் ஷங்கரின் மூத்த மகள் ஐஸ்வர்யா திருமணம் சமீபத்தில் சென்னையில் கோலாகலமாக நடந்தது. விழாவில் இந்திய திரை உலக பிரபலங்கள் ஏராளமானோர் பங்கேற்றனர். விழாவையொட்டி நடந்த இசை நிகழ்ச்சியில் பிரபல இந்தி நடிகரும் தீபிகா படுகோனே கணவருமான ரன்வீர் சிங், இயக்குனர் அட்லி, ஷங்கரின் மகள் அதிதி ஷங்கர் மற்றும் மகன் ஆகியோர் குத்து நடனம் ஆடி பார்வையாளர்களை மகிழ்வித்தனர். அவர்கள் ஆடிய நடனத்தின் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகியது.

தமிழ், தெலுங்கு மற்றும் மலையாள திரையுலகில் உள்ள பிரபல நடிகர்கள் மற்றும் இயக்குனர்கள் விழாவில் கலந்துக் கொண்டனர்.

அதைத் தொடர்ந்து விழாவில் ஷங்கர் மற்றும் குடும்பத்தினர் சிறப்பு போட்டோ சூட் நடத்தியுள்ளனர். இந்தப் புகைப்படங்களை அதிதி ஷங்கர் நேற்று தனது சமூக வலைதள பக்கங்களில் வெளியிட்டார். அதில் ஒரு புகைப்படத்தில் நடிகர் விஜய் மகன் சஞ்சய்யும் இருக்கிறார். இந்த புகைப்படங்கள் வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது. லைகா நிறுவனம் தயாரிப்பில் சஞ்சய் இயக்கும் படத்தில் அதிதி ஷங்கர் நடிக்க உள்ளார் என்று தகவல் வெளியானது குறிப்பிடத்தக்கது.

## லைகா நிறுவனம் வெளியிட்ட புதுப்பட அப்டேட்



2015 ஆம் ஆண்டு அல்போன்ஸ் புத்திரன் இயக்கிய பிரேமம் திரைப்படம் மூலம் திரைத்துறையில் அறிமுகமாகினார் அனுபமா பரமேஸ்வரன். அதற்கடுத்து மலையாள சினிமாவில் முன்னணி நடிகைகளுள் ஒருவர் ஆனார்.

தனுஷ் நடிப்பில் வெளிவந்த கொடி திரைப்படத்தில் நடித்து தமிழ் சினிமாவில் காலடியை பதித்தார். பின் மலையாளம் மற்றும் தெலுங்கு மொழி பலப் படங்களில் நடித்தார்.

கடந்த மாதம் வெளியான டில்லு ஸ்கொயர் திரைப்படத்தில் நடித்து மக்கள் மனதை வென்றார். இப்படம் அவருக்கு மிகப்பேரிய வெற்றியை பெற்றுக் கொடுத்தது. அதைத்தொடர்ந்து 'பரதா' என்ற தெலுங்கு படத்தில் நடித்துள்ளார். இப்படத்தை பிரவீன் காந்த்ரேகுலா இயக்கவுள்ளார். இதற்கு முன் சினிமா பண்டி என்ற திரைப்படத்தை இயக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

லைகா ப்ரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் அடுத்த படத்தில் அனுபமா பரமேஸ்வரன் நடிக்கவுள்ளார் என்ற தகவலை லைகா நிறுவனம் அவர்களின் எக்ஸ் தளத்தில் பதிவிட்டனர். இப்படத்திற்கான ஃபர்ஸ்ட் லுக்கை மே 6 அன்று மாலை 5 மணிக்கு வெளியிடப்போவதாக தெரிவித்துள்ளனர்.

இப்படத்தை அறிமுக இயக்குனரான ஏ.ஆர் ஜீவா இயக்கவுள்ளார். சமீபத்தில் லைகா நிறுவனம் குறும்பட போட்டி ஒன்றை நடத்தினர் அதில் தேர்ந்தெடுக்கப்படும் 5 சிறந்த குறும்படத்தின் இயக்குனர்களுக்கு வாய்ப்பு அளிப்பதாக கூறியிருந்தனர். அதில் ஒருவர் தான் ஏ.ஆர் ஜீவா.

இப்படம் பெண்களை மையப்படுத்தும் கதைக்களத்தோடு அமையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## மாரி செல்வராஜ் துருவ் விக்ரம் படத்தின் தலைப்பு வெளியாகும் தேதி அறிவிப்பு



2018ஆம் ஆண்டில் தமிழ் சினிமாவிற்கு இயக்குனராக அறிமுகமானவர் மாரி செல்வராஜ். இவர் எடுத்த முதல் திரைப்படம் பரியேறும் பெருமாள், மக்களிடையே மிகுந்த பாராட்டை இப்படம் குவித்தது.

இதையடுத்து, 2021ல் தனுஷ் நடித்த 'கர்ணன்' திரைப்படத்தை இயக்கினார். அடுத்ததாக 'வாழை' என்ற படத்தை இயக்கினார். உதயநிதி ஸ்டாலினின் கடைசி படமான மாமன்னன் படத்தை இயக்கியனார் மாரி செல்வராஜ். இந்நிலையில் மாரி செல்வராஜ் அவரின் 5வது படத்தை இயக்குகிறார்.

நடிகர் துருவ் விக்ரம், அனுபமா பரமேஸ்வரன் மற்றும் முன்னணி நடிகர்கள் பலர் இதில் நடிக்கின்றனர்.பா.ரஞ்சித்இப்படத்தைதயாரிக்கிறார்.

படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், இப்படத்தின் தலைப்பு வெளியாகும் தேதியை படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

அதன்படி, மாரி செல்வராஜ் துருவ் விக்ரம் நடிக்கவுள்ள படத்தின் தலைப்பு வரும் 6ம் தேதி வெளியாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹர்திக் பாண்டியா மீது மும்பை அணி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் சேவாக்



மும்பை இந்தியன்ஸ் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் இடையிலான ஆட்டம் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது. இந்த போட்டியில் மும்பை இந்தியன்ஸ் 170 இலக்கை எட்ட முடியாமல் 145 ரன்னில் ஆல்அவுட் ஆகி 24 ரன்னில் தோல்வியைத் தழுவியது.

இதன்மூலம் மும்பை இந்தியன்ஸ் 11 போட்டிகளில் விளையாடி மூன்றில் மட்டுமே வெற்றி பெற்றது. இதனால் ஏறக்குறைய பிளே ஆப் வாய்ப்பை மும்பை அணி இழந்துள்ளது.

இந்நிலையில்மும்பைஅணியின்தொடர்தோல்விகளுக்கு கேப்டன் ஹர்திக் பாண்டியா தான் காரணம் என்று வீரேந்திர சேவாக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கிரிக்பஸ் இணையத்தில் அவர் பேசியுள்ளார். அதில், "மும்பை இந்தியன்ஸ் அணி ஹர்திக் பாண்டியா மற்றும் டிம் டேவிட்டை கடைசியில் பேட்டிங் இறக்கி விட்டு என்ன சாதித்தீர்கள். எதிர்கொள்வதற்கு நிறைய பந்துகள் இருந்தும் அவர்கள் அவுட்டானார்கள்.

மும்பை அணியில் என்ன நடக்கிறது என்பது எனக்கு தெரியவில்லை. பாண்டியா, டேவிட் 7, 8வது இடத்தில் பேட்டிங்செய்வதைஎன்னால்புரிந்துகொள்ளமுடியவில்லை.ஒருவேளைஅவர்கள்முன்கூட்டியேகளமிறங்கினால் விரைவில் ஆட்டமிழக்கும் அளவுக்கு மோசமான வீரர்களா?

குஜராத் கேப்டனாக ஹர்திக் பாண்டியா 4வது இடத்தில் தொடர்ச்சியாக விளையாடியுள்ளார். ஆனால் மும்பை அணியில் என்ன நடந்தது? அதில் நான் குழப்பமடைந்துள்ளேன். மும்பை அணி நிர்வாகம் இந்த வீரர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அங்கு என்ன நடந்தது என்று கேள்வியெழுப்ப வேண்டும். அல்லது தங்களுடைய பேட்டிங் வரிசை ஏன் மாறியது என்பதை வீரர்கள் விளக்க வேண்டும். இங்கே கேப்டன், பயிற்சியாளர் ஆகியோர் மீதும் தவறு இருக்கிறது. எனவே உரிமையாளர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர் தெரிவித்தார்.

## உலகக் கோப்பையில் கோலியின் ரோல் "Anchor" எனக் கூறிய ஸ்ரீசாந்த், அப்படி ஒன்று டி20யில் இல்லை என்ற டாம் மூடி



டி20 உலகக் கோப்பைக்கான இந்திய அணியில் விராட் கோலிக்கு இடம் கிடைத்துள்ளது. விராட் கோலியின் ஸ்டிரைக் ரேட் குறித்து கேள்வி எழுப்பிய நிலையில், அணி நிர்வாகம் அவர் மீது நம்பிக்கை வைத்து எடுத்துள்ளது.

முன்னாள் கிரிக்கெட் வீரர்கள், கிரிக்கெட் விமர்சகர்கள் இந்திய அணி தேர்வு, இந்திய அணியில் இடம் பிடித்துள்ள வீரரின் ரோல் என்ன? என்பது குறித்து பேசி வருகிறார்கள்.

இந்த நிலையில் விராட் கோலி குறித்து டிவியின் லைவ் நிகழ்ச்சயில் ஸ்ரீசந்த் மற்றும் டாம் மூடி பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது ஸ்ரீசாந்த் கூறும்போது "விராட் கோலி 3வது இடத்தில் உள்ளம் இறங்க வேண்டும். ஏனென்றால் அந்த இடத்தில் களம் இறங்கி Anchor ரோலில் (நிலைத்து நின்று) விளையாட முடியும்" என்றார்.

அப்போது குறிக்கிட்டு ஸ்ரீசாந்த் பேசியதை திருத்தி கூறினார் டாம் மூடி. டாம் மூடி கூறுகையில் "Anchor என்ற வார்த்தை தவறு. அதை அவர் திருத்த வேண்டியது அவசியம். டி20 கிரிக்கெட்டில் அவருடைய புத்திசாலித்தனம், அனுபவம் ஓவருக்கு 11 அல்லது 9 ரன்ரேட் என்பதற்கு போதுமானது" என்றார டாம் மூடி.

விராட் கோலி ஐபிஎல் கிரிக்கெட்டில் தொடக்க வீரராக களம் இறங்கி விளையாடி வருகிறார். ஆனால் டி20 உலகக் கோப்பையில் இந்திய அணிக்காக தொடக்க வீரரான களம் இறங்குவாரா? என்பது சந்தேகம்தான்.

## சாம்பியன்ஸ் டிராபியில் விளையாட மறுத்தால் அது இந்தியாவுக்கு பின் விளைவை ஏற்படுத்தும்: ரஷித் லத்தீப் எச்சரிக்கை




ஐசிசி சாம்பியன்ஸ் டிராபி பாகிஸ்தானில் அடுத்த வருடம் நடைபெற இருக்கிறது. 2022ம் ஆண்டில் இருந்து பாகிஸ்தானில் நடைபெறும் கிரிக்கெட் தொடரில் பங்கேற்க மாட்டோம் என பிசிசிஐ தெரிவித்துள்ளது. 2023ம் ஆண்டு ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் பாகிஸ்தானில் நடைபெற இருந்தது. இந்தியா பாகிஸ்தான் செல்ல மறுப்பு தெரிவித்ததால் பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் போட்டிகள் நடத்தப்பட்டன.

அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெறும் சாம்பியன்ஸ் டிராபி தொடரிலும் இந்தியா விளையாட மறுப்பு தெரிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பாகிஸ்தான் மற்றும் வெளிநாடுகளிலும் போட்டி நடத்தப் படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் ஐசிசி தொடர்களை புறக்கணித்தால் அது பின் விளைவை ஏற்படுத்தும் என இந்திய அணிக்கு பாகிஸ்தான் அணியின் முன்னாள் கேப்டன் ரஷித் லத்தீப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.


இது தொடர்பாக ரஷித் லத்தீப் கூறியதாவது:

இரு நாடுகளுக்கு இடையிலான தொடரை நீங்கள் மறுக்க முடியும். ஐசிசி தொடர்களை மறுப்பது மிகவும் கடினமான ஒன்றாகும். ஐசிசி திட்டத்தை வெளியிடும்போது, அவர்கள் எங்கே சென்று விளையாட வேண்டும் என்பது அணிகளுக்கு தெரியும். உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் இந்தியாவுக்கு சென்று விளையாட வேண்டும் என்று பாகிஸ்தானுக்கு தெரிந்திருந்தது. அதன் அடிப்படையில்தன் கிரிக்கெட் ஒப்பந்தத்தில் கிரிக்கெட் போர்டுகள் கையெழுத்திடுகின்றன.

1996 உலகக் கோப்பை தொடரின்போது ஆஸ்திரேலியா, வெஸ்ட் இண்டீஸ் அணிகள் இலங்கை சென்று விளையாட மறுத்தது. இதனால் போட்டிகளில் விளையாடாமல் காலிறுதிக்கு முன்னேறியது. அதோடு உலகக் கோப்பையையும் வென்றது. இந்தியா பாகிஸ்தான் வந்து விளையாட மறுப்பு தெரிவித்தால் அது பிசிசிஐக்கு பின் விளைவை ஏற்படுத்தும்.

ஐசிசி சாம்பியன்ஸ் டிராபி தொடரை நடத்த பாகிஸ்தான் கராச்சி, ராவல்பிண்டி, லாகூர் மைதானங்களை பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டு தேர்வு செய்துள்ளது. இந்திய அணிகளின் ஆட்டங்களை ஒரே மைதானத்தில் நடத்த ஐசிசிக்கு பரிந்துரைத்துள்ளது.

## மாட்ரிட் ஓபன் டென்னிஸ்; சபலென்காவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார் இகா ஸ்வியாடெக்



களிமண் தரை போட்டியான மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடந்து வருகிறது. இந்த தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் போலந்தின் இகா ஸ்வியாடெக் பெலாரசின் அரினா சபலென்காவுடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே அபாரமாக செயல்பட்ட ஸ்வியாடெக் 75, 46, 76 (97) என்ற புள்ளிக் கணக்கில் பெலாரசின் அரினா சபலென்காவை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார்.



**அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை**

**நின்றாரின் பேதையார் இல்**

**விளக்கம்:**

**அறத்தை விட்டுத் தீநெறியில் நின்றவர் எல்லாரிலும் பிறன் மனைவியை விரும்பி அவனுடைய வாயிலில் சென்று நின்றவரைப் போல் அறிவிலிகள் இல்லை.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.